# மெட்ரோ ரெயில் நிலையங்களில் பொங்கல் கலை விழா

## 3 நாட்கள் நடக்கிறது

சென்னை, ஜன.8-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் பொங்கலை முன்னிட்டு கலை விழா நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டுக்கான பொங்கல் கலை விழா நாளை(வியாழக்கிழமை) தொடங்கி வருகிற 11-ந்தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென் இந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் இந்த விழாவில் நடைபெற உள்ளது.

முதல் நாள் விழா நாளை சைதாப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 2-ம் நாள் விழா நாளை மறுநாள்(வெள்ளிக்கிழமை)சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்திலும், 3-ம் நாள் விழா 11-ந்தேதி திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்திலும் நடைபெறுகிறது. இந்த 3 நாட்களில் மாலை 5.45 மணிக்கு தொடங்கும் இந்த விழாவை பயணிகள் கண்டுகளிப்பதற்காக சிறப்பு ஏற்பாடுகளை சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் செய்துள்ளது.